# இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை



# வங்கிக்கு வாருங்கள் வளமாக வாழுங்கள்



# இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் இலக்கியவரிசை

பதிப்பாளர்:
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை
நவம்பர் 2007

காப்பிரைட்
இந்த புத்தகத்தில் இருந்து எழுதுவதற்கு,
மறுபதிப்பிற்கு எழுத்தாளரை குறிப்பிட வேண்டும்.

கவனம் :
நிதி கல்வி தொகுப்பு பொது மக்களுக்காக இந்திய ரிசர்வ் வங்கியின் தயாரிப்பு.
உபயோகிப்போர் தங்களுடைய கணிப்பு மற்றும் கவனத்தை
செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கொண்டு விபரங்களுக்கு தயவு செய்து
இணையதளம் **www.rbi.org.in/commonman** - ஐத் தொடர்பு கொள்க
அல்லது எங்களைத் தொடர்பு கொள்க

இந்திய ரிசர்வ் வங்கி
போர்ட் கிளாஸிஸ், ராஜாஜி சாலை
சென்னை-600 001
மின் அஞ்சல்: **rdchennai@rbi.org.in**

ஆக்கம்
சாந்தினி மூல்சந்தானி, அருண் விஷ்ணு குமார், ஹரிதாஸ் சரோட்,
ஹரிதா தாக்கர், **N.**ஜெயந்தி, **P.S.**ரவி, சித்தார்த் பிரகாஷ்,
**J.**நவாஸ், **C.K.**அலக்ஸ்சாண்டர், **A.**சந்திரன், **R.G.**நாயர்,

தமிழாக்கம்
**S.** இராதாகிருஷ்ணன், கோமதி விஜயன்.


வங்கிக்கு வாருங்கள்
வளமாக வாழுங்கள்
கொட்டாம்பட்டி கிராமத்தில் ஒரு நாள் அதிகாலையில்... கிராமத் தலைவர் வீட்டிற்கு வெளியே அமர்ந்து, தமது தேநீரை அருந்திக் கொண்டிருந்தபோது...
திடீரென்று...
ஆ! ஐயோ!!
என்னது?
அவருடைய அண்டை வீட்டுக்காரர் ராமு.
எல்லாம் போச்சு! என் பணம், எங்க நகை எல்லாம் காணோம். ஐயோ என் மக ராதா கல்யாணத்தை எப்படி நடத்துவேன். அவன் நாசமாப் போக.
எல்லாம் போச்சு


ராமு என்ன நடந்தது
பாவம் ராமு, மக கல்யாணத்திற்கு 10 நாள்தான் இருக்குது.
நாம போலீசுக்குப் போகலாம்.
ஐயா, என்னோட 10,000 ரூபா, நகைங்க எல்லாம் போயிடுச்சு.
திடீரென்று, கூட்டத்தை விலக்கிக் கொண்டு பக்கத்து கிராமத்தில் வசிக்கும் ராமுவின் இளைய சகோதரர் லட்சுமணன் முன்னே வந்தார்.
ராமு அண்ணே, உங்க வீட்டில் திருட்டுப் போயிருச்சாமே?
கண்ணீருடன் ராமு.
ஆமா தம்பி! நான் எல்லாத்தையும் இழந்துட்டேனே! அழிஞ்சுபோயிட்டேனே !
அடக் கடவுளே!


அதையடுத்து ராமுவும் லட்சுமணனும் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் அளித்துவிட்டுத் திரும்புகையில்...
நான் இப்ப என்ன செய்யறது? யார் எனக்குக் கடன் கொடுப்பாங்க?
காவல் நிலையம்
அண்ணே, நான் இருக்கேன். கல்யாணத்திற்கு உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும்னு சொல்லுங்க.
கிட்டதட்ட எல்லா ஏற்பாட்டுக்கும் பணம் கொடுத்தாச்சு. ஆனால் விருந்து வைக்கத்தான் 5000 ரூபா தேவைப்படும்.
கவலைப் படாதீங்க. நான் உங்களுக்குப் பணம் கடன் தாரேன்.
ராமு சற்றே நிம்மதியடைந்தார்.
ரொம்ப நன்றியப்பா. அப்ப உங்க வீட்டுக்குப் போவோமா?
வீட்ல எந்தப் பணமும் இல்லை. பணம் ஜனதா வங்கியில இருக்கு.
ராமு ஆச்சரியத்திற்குள்ளானார்.
வங்கியிலா? பணக்கார ஜனங்கதானே வங்கியில கணக்கு வச்சுக்க முடியும். ஏன், கிராமத் தலைவருக்கு மட்டும்தானே வங்கிக் கணக்கு இருக்கு.
அப்படியெல்லாம் இல்லை! உண்மையில் என் கிராமத்தில அனேகமாக ஒவ்வொருத்தருக்கும் வங்கிக் கணக்கு இருக்கு.


ராமு அவ்வளவாக திருப்தி அடையவில்லை.
ஆனால் லட்சுமணா, வங்கியை கொள்ளையடிக்க மாட்டாங்களா? பணம் எப்படி அங்க பாதுகாப்பா இருக்கு?
அண்ணா, எல்லா வங்கியிலும் பணம் 24-மணிநேர பாதுகாப்போட வலுவான அறையில இருக்கு.


அது மட்டுமில்லாம, எல்லா வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கி கட்டுப்பாட்டில இருக்கு... ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கும் வங்கி ரிசர்வ் வங்கிதான்.
வங்கி BANK
PRIVATE
RBI
ஆர்பிஐ
வங்கி BANK
வங்கி BANK
வங்கி BANK
PUBLIC
பொதுத்துறை
CO-OPERATIVE
கூட்டுறவுத் துறை


அதோடு இல்லை. டெபாசிட் ரூ 1 லட்சம் வரை இன்சூரன்ஸ் செய்யப்பட்டு இருக்கு. நமது பணம் பாதுகாப்பாக இருக்கும்.


அப்ப நம்ம பணத்தை வங்கியில போட்டால் பாதுகாப்பா இருக்கும், சரியா?
அண்ணே, வெறும் பாதுகாப்பு மட்டுமில்ல, பணத்தை வங்கியில டிபாசிட் (வைப்பு) செஞ்சா, அதன்மேல் வட்டி தருவாங்க; பணத்தஎவ்வளவு காலம் வங்கியிலவச்சிருக்கீங்கறதைப் பொறுத்து வட்டி கிடைக்கும்.


ஒரு வங்கி எப்படி நடக்குதுங்கிறத சொல்றேன், கேளுங்க.
சொல்லு.


வங்கி, ஜனங்ககிட்ட டிபாசிட்டா பணத்தை வாங்கி, அதை தேவைப்படுறவங்களுக்குக் கடனா கொடுக்குது
வங்கி
டிபாசிட்டுகள்
கடன்கள்
கிடைக்குது.


நம்ம அப்பா நம்ம எல்லாருக்கும் ரூ 10,000 கொடுத்தாரில்லையா 10,000 ரூபாய்க்கு வங்கியில் எவ்வளவு வட்டி கிடைக்கும்னு தெரியுமா? கேட்டா ஆச்சரியப்படுவீங்க.


"நீங்க வீட்டில் பணத்தை வச்சிருந்தீங்க. திருடன் தூக்கிட்டுப் போயிட்டான். ஆனா நான், அந்தப் பணத்தை வங்கியில் போட்டேன். அங்க அது பாதுகாப்பா இருக்குது. வட்டியும் கிடைக்குது. இப்ப எங்கிட்ட அதிக பணம் இருக்கு"
அசல்
வட்டி
வீட்டில் உள்ள பணம்
வங்கியில் உள்ள பணம்


ராமு ஆச்சரியத்திற்குள்ளானார்.
அற்புதம்! எனக்கு இது தெரியாம போச்சே! எந்தவித ஆபத்தும் இல்லாம பணம் வளருதே!
அது மட்டுமில்ல! நீங்க வங்கியிடமிருந்து பணம் கடனும் வாங்கலாம்.


ஏன் வங்கியிடமிருந்து வாங்கணும்? அப்பா மாதிரி, நான் அடகுக் கடைக்காரர்கிட்ட கடன் வாங்கலாமே!
அடகுக் கடைக்காரர்கிட்ட ரொம்ப அதிகமா வட்டி கொடுத்ததை பத்தி அப்பா உணரவில்லை.


நூத்துக்கு அஞ்சு (5%) வட்டியினு அடகுக் கடைக்காரன் சொல்றது வருசத்துக்கு நூத்துக்கு அறுவது (60%) கணக்கு ஆகுது. ஏன்னா வட்டி ஒவ்வொரு மாசத்திற்கும் வசூலிக்கிறாங்க. மாசாமாசம் வட்டி கட்டலன்னா வட்டிக்கும் வட்டி போடுவாங்க. கடனைத் தீர்க்க எவ்வளவு காலம் ஆகுதோ அந்த அளவு கட்ட வேண்டிய பணமும் அதிகமாகும். இப்போ யோசிச்சுப் பாருங்க. நம் அப்பா எவ்வளவு பணம் கட்டியிருப்பாரு.
இந்த உதவிக்கு மிக்க நன்றி.
பரவாயில்லை. எப்பவும் நானிருக்கிறேன்.
வங்கியிலிருந்து அவர் கடன் வாங்கியிருந்தா 10-15% வட்டியை வருஷத்துக்கு கட்டியிருக்கலாம்.


கடைசி வரைக்கும் அப்பாவால் கடனைத் திருப்பிக் கட்டவே முடியல. அப்படித்தான் அடகுக் கடைக்காரரிடம் 10,000 ரூபாய் கடனுக்காக 2 லட்சம் பெறுமான நிலத்தை இழந்தார்.
அடப்பாவமே! என்ன ஒரு ஏமாத்து வேலை.
அண்ணே, இப்ப புரிஞ்சுக்கிட்டீங்களா, அடுத்தமுறை கடன் வாங்க நினைக்கும்போது, ஒரு வங்கிக்கு போங்க. சரி சரி, சீக்கிரம் வாங்க. வங்கி மூடறதுக்குள்ள போய்ச் சேரனும்.
வங்கியை நோக்கி சென்றுகொண்டிருக்கும்பொழுது சகோதரர்கள் ஒரு கட்டுமானப் பணி நடைபெறும் இடத்தைக் கடக்கிறார்கள்..
அட, அங்கே என்ன நடக்குது?
அண்ணே, உங்களுக்கு வியாபாரி ரவியை ஞாபகமிருக்கா? அவர் இப்ப ஒரு குளிர் பதன கிடங்கை கட்டிக்கொண்டிருக்கிறார். இதற்கு எங்க வங்கியிலிருந்துதான் அவர் கடன் வாங்கி இருக்காரு. சீக்கிரம் வேலை முடிஞ்சுரும்னு நம்புறேன்.
குளிர்


ஏன்?
எதனால் இதில் ரொம்ப ஆர்வமாயிருக்கே.
லட்சுமணன் விளக்கத் தொடங்கினார்.
அக்கம் பக்கத்து கிராமங்களில் உள்ள பால்காரர்களுக்கும் இதனால் லாபம்.
இப்ப பாருங்கண்ணே, என்னோட பசுக்கள் கறக்கிற அவ்வளவு பாலையும் எப்பவும் என்னால விற்க முடியல. நிறைய பால் வீணாகுது. இந்த குளிர்பதன கிடங்கு வந்துட்டா அதிகப்படியான பாலை என்னால் சேமித்து வைக்க முடியும். அப்புறம் அதை விற்பதால் நல்ல வருமானம் கிடைக்கும்.
பால்காரர்கள் மட்டும் இல்லை. கட்டுமானப் பணி செய்யறவங்களும் சம்பாதிக்கிறாங்க. இந்த வியாபாரத்தை நடத்த சில பட்டதாரிகளை, வேலைக்கு வைக்கப்போறதா கேள்விப்பட்டேன். என் பையனுக்கும் இங்க ஒரு வேலை கிடைக்கும்னு நம்புறேன்.
வங்கிகள் நம் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியம்னு இப்ப நான் புரிஞ்சுகிட்டேன். அவை சேமிப்பை மட்டும் ஊக்குவிப்பதில்லை, உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் பணம் கடன் தருகின்றன.


கடன்கள்
உற்பத்தி
டிபாசிட்டுகள்
வங்கி
நல்ல வருமானம்
அதிகரித்த சேமிப்பு


லட்சுமணா, இப்ப எனக்கு ஒரு விஷயம் தான் புரியமாட்டேங்குது. வங்கி எல்லாப் பணத்தையும் மற்றவங்களுக்கு கடனா கொடுத்துட்டா, டிபாசிட்காரங்க கேட்கும்போது எப்படி திருப்பித் தர முடியும்?
கவலைப்படாதீங்க அண்ணே, இந்திய ரிசர்வ் வங்கி விதிப்படி வங்கிகள் மொத்தப் பணத்தின் ஒரு பகுதியை டிபாசிட்காரங்க கேட்கும் போது தர தயாராக வைச்சிருக்கும்.


சகோதரர்கள் வங்கியை சென்றடைந்தனர்.
பணம்
பணம்
சேமியுங்கள்
கடன்
வாங்க கவுன்டருக்கு போய் செக்கை பணமாக்கலாம்.
லட்சுமணா, நான் செக்கை கிட்டத்தில பார்க்கவா?
ஒரு காசோலை பணம் கொடுப்பதற்கான ஆணை
தேதி
பெறுபவர்
தொகை(வார்த்தையில்)
தொகை(எண்களில்)
தேதி : 02/07/07
கொடு லட்சுமணன் அல்லது வைத்திருப்பவர்
ரூபாய் ஐந்து ஆயிரம் மட்டும் 5000/-
A/c எண் 007007
ஜனதா வங்கி
என் கிராமம்
Laxman
123456 123456789 123456
கையெழுத்து



லட்சுமணன் கவுன்டரில் காசோலையைக் கொடுத்து பணத்தைப் பெறுகிறார்
வங்கிக் கணக்கு வெச்சிக்கறது சுலபமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கே. ஒரு வங்கிக் கணக்கு இல்லாததால் ரொம்பவே நஷ்டப்பட்டுட்டேன். இப்ப கணக்கு தொடங்க முடியுமா?
பணம்
ஓ, முடியுமே, வாங்க கிளை மேலாளரைப் பார்க்கலாம்.
நான் உள்ளே வரலாமா, ஐயா.
எப்படி இருக்கீங்க லட்சுமணன்? ரொம்ப நாளாச்சு பார்த்து, வாங்க வாங்க...
மேலாளர்
மேலாளர் அறையின் உள்ளே...
நலமாக உள்ளேன், ஐயா. என் அண்ணன் ராமு உங்கள் வங்கியில் கணக்கு தொடங்க விரும்புகிறார்.
இன்றே சேமிக்கத் தொடங்குங்கள்.
ஜனதா வங்கி
இன்றே உங்கள் கணக்கை தொடங்குங்கள்.
அப்படியா லட்சுமணன், உட்காருங்க. முதல்ல, என்னென்ன விதமான கணக்குகள் ஆரம்பிக்கலாம் என்பதை விளக்குகிறேன்.
மூன்று வகையான கணக்குகள் உள்ளன. சேவிங்ஸ் (சேமிப்பு), கரண்ட் (நடப்பு) மற்றும் டேர்ம் (கால) வைப்புகள் ஆகும்.
இன்றே சேமிக்கத் தொடங்குங்கள்.
ஜனதா வங்கி
மேலாளர்


பணம்
சேமிப்பு
சேமிப்புக் கணக்கில் நீங்கள் ஒரு குறைந்தபட்சநிலுவைத் தொகையை பராமரிக்க வேண்டும். குறைந்தபட்சதொகைக்கு மேல் உள்ள தொகையை எப்போது வேண்டுமானாலும் உங்கள், தேவைகளுக்காக எடுத்துக் கொள்ளலாம். இதற்கு வட்டி தற்போது வருடத்திற்கு 3.5% ஆகும்.
இரண்டாவதாக, எங்களிடம் நடப்புக் கணக்கு இருக்கு. இதில் உங்கள் பணத்தை டிபாசிட் செய்யவோ திரும்ப எடுக்கவோ எப்போது வேண்டுமானாலும் முடியும். ஆனால் இந்தக் கணக்கில் உங்கள் டிபாசிட்டுகளுக்கு எந்த வட்டியும் வராது. இது வியாபாரிகளுக்கு மிகவும் பொருத்தமானது.
அடுத்ததாக, எங்களிடம் கால வைப்புக் கணக்குகள் உண்டு- அவை இரண்டு வகைப்படும், குறித்தகால வைப்பு மற்றும் தொடர் வைப்பு (டிபாசிட்).
ஜூன்
ஜனவரி
பிப்ரவரி
ஏப்ரல்
மார்ச்
வட்டி
தொடர் வைப்புக் கணக்கில், நீங்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு டிபாசிட் செய்து வரவேண்டும். உதாரணமாக, ஒவ்வொரு மாதமும் ரூ 100 ஒரு வருட காலத்திற்கு போடலாம். இவ்வகை டிபாசிட்டும் வட்டியை சம்பாதிக்கிறது.
குறித்தகால வைப்புக் கணக்கில் (பிக்சட் டிபாசிட்) நீங்கள் டிபாசிட் செய்யும் பணம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வங்கியில் வைக்கப்படுகிறது. அது உங்களுக்கு வட்டியைக் கொடுக்கிறது. நீண்ட கால டிபாசிட்டுக்கு அதிகமாக வட்டி வரும். வேண்டுமானால் நிர்ணயித்த காலத்திற்கு முன்பாகவே பணத்தைத் திரும்பப் பெறலாம். ஆனால் உங்களுக்கு வரவேண்டிய வட்டியில், சிறிது நஷ்டம் ஏற்படும். நினைவில் கொள்ளுங்கள் நீண்ட
ஆரம்பம்
பணம் எடுக்க இயலாது


ஐயா, எனது தேவை பாதுகாப்பான தொடர் சேமிப்பு, அதோட எப்போ தேவையோ அப்ப பணத்தை திரும்ப எடுத்துக்கற வசதி.
அப்படியானால் உங்களுக்கான சிறந்த திட்டம் சேமிப்புக் கணக்குதான். இதில் குறைந்த பட்சநிலுவையாக ரூ 500 வைத்திருந்தால் போதும்.
ராமு மனமுடைந்து போனார்...
அடடா இல்லையே! இன்னைக்கி காலையில்தான் என் வீட்டில் திருட்டு போயிடிச்சி. என்கிட்ட சல்லிக் காசு இல்லை. அது தவிர, ஒரு மாதத்திற்கு 1200 ரூபா நான் சம்பாதிக்கறதே பெரிய விஷயம். என்னாலே எப்படி ஐயா முடியும்...
கவலைப்படாதீர்கள் ராமு, எங்கள் வங்கி உங்களுக்கு ஒரு தீர்வு வைத்துள்ளது. அடிப்படை சேமிப்பு வங்கிக் கணக்கு என்று ஒரு திட்டம் வைத்துள்ளோம். அதில் நீங்கள் குறைந்தபட்ச நிலுவைத் தொகையாக பத்து ரூபாய் மட்டும் வைத்தால் போதும். இந்தக் கணக்கும் மற்ற சேமிப்புக் கணக்குகளைப் போல் வட்டி சம்பாதித்துத் தரும். இது ஒரு நல்ல செய்திதானே.
ஆஹா நிச்சயமா! அப்படின்னா, நான் கூட ஒரு கணக்குத் துவங்கலாம். அதை எப்படி ஆரம்பிக்கணுங்க?
இன்றே உங்கள் கணக்கைத் தொடங்குங்கள்
குறிப்பு: அடிப்படை சேமிப்புக் கணக்கு பரவலாக, 'நோ பிரில்ஸ்' கணக்கு என அழைக்கப்படுகிறது.


உடனே உங்களுக்குக் கணக்கு தொடங்கிவிடலாம். கணக்கு தொடங்குவது இந்நாட்களில் மிகவும் எளிதாகிவிட்டது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்....
2 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்
வாக்காளர் அடையாளம்
பெயர்: ராமு
முகவரி: வீட்டு எண் 3, பெரிய தெரு தபால் அலுவலகம் பின்புறம் கொட்டாம்பட்டி பின் - 623526
உங்கள் முகவரிக்கான அத்தாட்சியாக உள்ள ஒரு காகித ஆவணம். அது ரேஷன் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, தபால் அலுவலகத்திலிருந்து சான்றிதழ், உங்கள் பெயரில் உள்ள மின் கட்டணச் சீட்டு.
விண்ணப்பம்
பெயர்:
முகவரி:
பிறந்த தேதி:
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம். இது மிக எளிதாகவும் உங்கள் மொழியிலும் இருக்கு.


அன்றைய நாள் முடிவடைவதற்குள் ராமு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கிறார். அதன் பின் பெருமையுடன் சேமிப்பு கணக்கு வைத்துள்ளவராகிறார்.
இதோ உங்கள் பாஸ்புத்தகம். இது உங்களது டிபாசிட்டுகள், பணம் திரும்ப எடுத்தது, நீங்கள் சம்பாதித்த வட்டி ஆகியவைகளைப் பற்றிய பதிவுகளைக் காண்பிக்கிறது. எப்பொழுது வங்கிக்கு வந்தாலும் இதைக் கொண்டுவர மறந்து விடாதீர்கள்.
பாஸ் புத்தகம்
தேதி
வைப்பு
எடுப்பு
இருப்பு
கையொப்பம்
2/7/07
Rs.10/-
-
Rs.10/-



மேலாளர் அறையிலிருந்து வெளிவரும்பொழுது, ராமு ஒன்றைப் பார்த்தார்...
கடன்
புகார் பெட்டி
அந்தப் பெட்டி எதற்காக இருக்கிறது?
ராமு, எங்கள் வாடிக்கையாளர்கள் எங்களுக்கு மிக முக்கியம். ஒருவேளை, எங்களுடைய சேவைகளில் உங்களுக்குத் திருப்தி ஏற்படாவிட்டால், உங்களது புகாரை அந்தப் பெட்டியில் போடலாம். நானே நேரடியாக அப்புகார்களைப் படித்து, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை உறுதி செய்வேன்.
தொடங்குங்கள்
இன்றே உங்கள் கணக்கைத் தொடங்குங்கள்
ஜனதா வங்கி
இன்றே சேமிக்கத்
ங்குங்கள்
அப்படியா, வேறு என்னென்ன சேவைகளை வங்கி கொடுக்கிறது?
இன்றே உங்கள் கணக்கைத் தொடங்குங்கள்
ஜனதா வங்கி


உங்கள் சார்பாக பணத்தை அனுப்பவோ மற்றும் பெறவோ நாங்கள் ஏற்பாடு செய்ய முடியும்- பணம் அனுப்புதல்
பணம் எடுத்தல்
பணம் கொடுத்தல்
உங்களது மதிப்பு மிக்க பொருட்களை எங்களால் பாதுகாக்க முடியும்- பாதுகாப்புப் பெட்டகங்கள்
எந்த நாளிலும் எந்த நேரத்திலும் உங்களது பணம் உங்களுக்குக் கிடைபபதை உறுதி செய்யமுடியும்- தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் (ஏ.டி.எம்)
AT
ஏ டி எம்
WITHDRAW MONEY AT ANY TIME
பணம்
உங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் சிறு தொகையைக் கடனாகவும் கொடுக்கிறோம்- இருப்புக்குமேல் பணம் எடுப்பு (ஓவர் ட்ராஃப்ட்)


ராமுவும் லட்சுமணனும் வங்கியிலிருந்து விடைபெறும் நேரம் வந்தது.
ஐயா, உங்களுக்கு ரொம்ப நன்றி. வங்கியில் கணக்கு தொடங்குவது மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தைப் புரிஞ்சுக் கிட்டேன். முன்னாடியே இதை செஞ்சியிருக்கணும். நான் நெனச்சதைப்போல இல்ல. எவ்வளவு சுலபமா இருக்கு!
அட, இதுக்காக எனக்கு நன்றி சொல்லவேண்டாம். இந்த நன்மைகளுக்காக லட்சுமணன் உங்களை அறிமுகப்படுத்தின மாதிரி நீங்களும் நிறைய பேரை கூட்டி வந்து கணக்குத் தொடங்க வைக்க வேண்டும். அதனால், அவர்கள் சேமிப்பின் மூலம் பணம் சம்பாதிக்கலாம்.
இன்றே
இன்றே
ஜனதா வங்கி

**நீங்கள் யார் என்பதோ, என்ன செய்கிறீர்கள் என்பதோ முக்கியமில்லை. ஒரு சேமிப்பு வங்கிக் கணக்கு உங்களது கனவுகளை நனவாக்க உதவுகிறது.**














என்னுடைய சிறு வயதிலிருந்தே வியாபாரம் தொடங்க வேண்டும் என்ற கனவு இருந்தது. வங்கியில் கணக்கு தொடங்கியபிறகே என் கனவு நனவானது. வங்கி எனக்குக் கடன் கொடுத்தது. இப்பொழுது நான் ஒரு பெருமை மிகு வியாபாரி. எனது வாழ்க்கை




எனது ஓய்வூதியத்தைப் பெறுவதற்காக தபால்காரரை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டிய தில்லை. எனது மூத்த குடி மக்களுக்கான ஓய்வூதியம், ஒவ்வொரு மாதமும் தானாகவே எனது வங்கிக் கணக்கில் டிபாசிட் செய்யப்படுகிறது. எவ்வளவு நிம்மதி.




நிதிச் சுதந்திரம்
கடன்கள்
வைப்புகள்
சேமிப்பு
வங்கிச் சேமிப்புக் கணக்கு என்பது நல்வாழ்விற்கும் நிதிப் பாதுகாப்பிற்குமான முதல் படிக்கட்டாகும்.
பாஸ் புத்தகம்
சேமிப்பு கணக்கு
ஜனதா வங்கி


நாங்கள் எல்லோரும் வங்கிச் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம் நீங்கள் எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள்?
முற்றும்

# உங்கள் நலனுக்காக

பல்வேறு வங்கிகளால் அளிக்கப்படும் அடிப்படைச் சேமிப்பு கணக்கு பரவலாக 'நோ பிரில்ஸ்' சேவிங்ஸ் அக்கவுண்ட் **(No-Frills Saving Account)** என அழைக்கப்படுகிறது.

பல்வேறு வங்கிகள் இவ்வசதியைப் பல்வேறு பெயர்களில் வழங்குகின்றன. அவை கேன்சரல், ஆசாதி, க்ராப் பிரகதி, சுகாமா என்று பல.

•

இத்தகைய சேமிப்புக் கணக்குகளில் குறைந்த பட்சநிலுவைத் தொகை பூஜ்யத்திலிருந்து ரூபாய் நூறு வரை தேவைப்படும்.

•

கணக்குத் தொடங்கும்பொழுது விவரங்களைக் கேட்டறியவும்.

•••

அனைத்து வங்கிகளும் வாரிசுதாரரை நியமிக்க வசதி கொடுக்கின்றன. இவ்வசதியைப் பயன் படுத்திக் கொள்ளவும்.

•••

ஒரு வங்கியின் கிளை அளிக்கும் வாடிக்கையாளர் சேவை, திருப்திகரமாக இல்லாவிடில், கிளை மேலாளரை அணுகவும் அல்லது அவ்வங்கியின் மண்டல அல்லது பிராந்திய அலுவலகத்திற்கு எழுதவும் அல்லது உங்கள் மாநிலத்தில் உள்ள வங்கிக் குறை தீர்ப்பாணையத்தை அணுகவும்.

•••

வங்கிக் குறை தீர்ப்பாணையத்தின் வேலை, வாடிக்கையாளர்களுக்கு வங்கியிடம் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வங்கிக் குறை தீர்ப்பாணையம் உண்டு.

•••

வங்கிகள் தானியங்கி பணம் வழங்கும் இயந்திர **(ATM)** சேவைகளை அளிக்கிறது. அது வங்கியில் டிபாசிட் செய்வது, பணம் எடுப்பது போன்ற வங்கிப் பரிவர்த்தனைகளை, ஒரு நாளின் எந்த நேரத்திலும் செய்ய உதவுகிறது. இத்தகைய வசதிகளைப் பெற்றிட நீங்கள் வங்கியின் உதவியை நாடலாம்

•••

வங்கிகள் பல்வேறு வகையான சேவைகளை வழங்குகின்றன- விவசாய கடன் அட்டை (கிசான் கிரெடிட் கார்டு-**KCC**), பொது கடன் அட்டை (ஜெனரல் கிரெடிட் கார்டு-**GCC**), காப்பீட்டு சேவைகள் போன்றவை. இத்தகைய சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினால் உங்கள் வங்கியின் வழிகாட்டுதலைப் பெறவும்.

மேற்கொண்டு விபரங்களுக்கு தயவு செய்து இணையதளம் **www.rbi.org.in/commonman** - ஐத் தொடர்பு கொள்க

சவாலாக இருக்கும் சில குறிப்பிட்ட பொதுப் பொறுப்புகளை ஏற்று திறம்பட நடத்துவதில், நமது நாட்டின் 'மைய வங்கி' என்ற தனிப் பெரும் அந்தஸ்தைப் பெற்ற இந்திய ரிசர்வ் வங்கி உறுதியாய் இருக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி, பொது நலன் கருதிச் சேவை செய்யும் ஒரு பொது நிறுவனம். சாதாரண மனிதர்களுக்கும் நிதியியல் அறிவு, நிதியியல் கல்வி இவற்றை அளிக்க சில முயற்சிகளை ரிசர்வ் வங்கி சமீப காலமாக எடுத்து வருகிறது. அதன்வாயிலாக, வங்கிகளின் சேவைகளில் சாதாரண குடிமக்கள் என்ன எதிர்பார்த்திருக்கிறார்கள், அவர்கள் முன் இருக்கும் வாய்ப்புகள் என்னென்ன, அவர்களது உரிமைகள் கடமைகள் என்னென்ன என்பவை தெரிவிக்கப்படும்.

இத்தகைய செயல்நோக்குடன், ''இந்திய ரிசர்வ் வங்கியின்- நிதியியல் இலக்கிய வரிசை'' என்ற தலைப்பில், படங்களுடன் கூடிய சிறு புத்தகங்கள் சிலவற்றை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட உள்ளது. நிதியியல் விபரங்களில் மக்கள் அனைவரும் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இவை வெளியிடப்படுகின்றன.

ஒரு வங்கிக் கணக்கை வைத்துக்கொள்வதன் தேவையையும் அதனால் கிடைக்கும் பயன்களையும் சாதாரண மனிதனுக்கும் புரியும்படி சொல்வதற்கு, 'வங்கிக்கு வாருங்கள் வளமாக வாழுங்கள்' என்ற இப்புத்தகம், இத்தகைய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வெளியிடப்படுகிறது. இதுவரை நிதி அரங்கத்திற்கு வெளியே இருந்தவர்களையும் இப்போது இந்திய வங்கியியலில் சேர்த்துக் கொள்வதே எங்களின் நோக்கமும் செயல்பாடும் ஆகும்.